**6.**நன்றிப்  பாடல்

மகிழ்ந்திடாய் மானிலமே
உந்தன் மைந்தரின் மாட்சியிலே
இன்று பேரருள் பாய்ந்தது குருத்துவத்தால் - என்று
புகழ்திடாய் திருமறையே

உலகத்தின் பேரோளியாய் - வாழும்
உள்ளத்தின் ஆறுதலாய் - எந்த
காலமும் வாழ்திடும் எழில் நிலையாம் - இன்பக்
காட்சியே குருத்துவமே

குருத்துவ நீர் சுணையால் -திகழ்
கிறிஸ்துவை ஈன்றவளே - இன்ற
காய்ந்திடும் பாருக்கு நீர் தெளிக்க - வரும்
குருக்களை காத்திடுவாய்

**7.**நற்கருணைப் புகழ்ப் பாடல்

அன்பின் தேவநற்கருணையிலே
அழியாப் புகழோடு வாழ்பவரே
அன்புப் பாதையில் வழிநடந்தே
அடியோர் வாழ்ந்திடத் துணை செய்வீர்

அற்புதமாக எமைப் படைத்தீர்
தற்பரன் நீரே எமை மீட்டீர்
பொற்புடன் அப்பரச குணத்தில்
எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித்தெமை நீ ஆட்கொண்டீர்

கல்வாரி மலையின் சிகரமதில்
கனிவுடன் தினம் எமை நிலை நிறுத்தும்
நற்கருணை விசுவாசமதில்
நம்பிக்கையூட்டி வளத்திடுவீர்
இளமையின் பொழிவால் திகழ் திருச்சபையும்
யாவரும் வாழத் தயை புரிவீர்

புனித வியாழன்
திருப்பலிப்பாடல்கள்
மார்ச் **2016**

**1.**வருகைப்பாடல்

நிறைவாழ்வை நோக்கி திருப்பயணம்
பாருலகில் செல்லுவோம் - அருள் வாழ்வு தரும்
வார்த்தைகளால் நன்மைகளை நாம் செய்வோம் (2)
செல்வோம் விரைந்து செல்வோம்
நிறை வாழ்வை நோக்கியே செல்வோம்
செய்வோம் விரைந்து செய்வோம்
இனி புதியதோர் உலகினை செய்வோம்
சுமை சுமக்கும் தோள்களுக்கு வலிமையினை
ஊட்டுவோம்
சுகம்மறந்தமாந்தருக்கு வளமையினைக்காட்டுவோம்-
இருகரங்கள்விரித்திங்குவாடுவோரைத்தேற்றுவோம்-
இறையரசின் கனவுகளை நாடுதோறும் சாற்றுவோம்

பரிவிரக்கம்சாந்தம்அன்புபொறுமைகொள்ளுவோம்
மகிழ்ச்சியிலும்அமைதியாகஅடக்கமுடன்வாழுவோம்
விசுவாசம் நன்னயமும் கேடயமாய்த் தாங்கியே - 2
புது இனமாய் புதுயுகமாய் வாழ்வு நோக்கி
செல்லுவோம்

இந்தபாடல்களின் MP3 வடிவம்
**www.tamilcatholicnews.com**
என்றஎமதுஇணையத்தளத்தில்
தரவ   ிறக்கம்செய்யலாம்

## 2.தியானப்பாடல்

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்

கிறிஸ்துவின் அன்பு நம்மை எல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோம்
சீவிய தேவனுக்கஞ்சிடுவோம்
அவருக்கன்பு செய்திடுவோம்
நேய உள்ளத்துடனே யாம்
ஒருவரை ஒருவர் நேசிப்போம்

எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக

## 3.புனித வியாழன் சிறப்புப்பாடல்

ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக்
கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்

சீமோன் இராயப்பரிடம் அவர் வரவே
இராயப்பர் அவரை நோக்கிச் சொன்னது
ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக்
கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்

நான் செய்வது இன்னதென்று
உனக்கு இப்போது தெரியாது, பின்னரே விளங்கும்
ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக்
கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்

## 4.காணிக்கைப் பாடல்

தெய்வீக பலியில் உறவாடும் தெய்வமே - 2
உன்னோடு பலியாக நானும் இணைகின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய் காணிக்கை ஏற்றிடுவாய்
தெய்வீக பலியில் உறவாடும் தெய்வமே

வானம் காணும் ஒளி எல்லாம் என்
தேவன் தந்த காணிக்கை (2)
மேகம் சிந்தும் துளி எல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை (2)
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர்ப்பாதம்

வேதம் சொன்ன வழி எல்லாம் என்
தேவன் தந்த காணிக்கை (2)
பாதம் படைத்த கனி எல்லாம் என்
தேவன் தந்த காணிக்கை (2) - இந்த நினைவில்...

## 5.திருவிருந்துப் பாடல்

இதை என் நினைவாய்ச் செய்ய மாட்டாயா
என் உடலை உண்டு உயர மாட்டாயா
குருதி அருந்தி திருந்த மாட்டாயா (என்) 2
என்னைப்போல வாழ மாட்டாயா (நீ) 2
கன்னத்தில்அறைந்தால்கன்னத்தைக் காட்டச்
சொன்னேன்
தீமை செய்தால் நன்மை செய்யச் சொன்னேன் (2)
இதற்கு மேல் நான் என்ன கேட்கின்றேன் - 2
வெறும் வாத்தையல்ல வாழ்ந்தும் காட்டிவிட்டேன் 2
பணிவிடை பெற அன்று பணியைச் செய்யச்
சொன்னேன்
தாழ்ச்சி கொண்டால் உயர்வு உறுதியென்றேன் (2)
இதற்கு மேல் நான் என்ன கேட்கின்றேன் - 2
உனை வாழச் செய்ய வாழ்ந்தும் காட்டிவிட்டேன் -